## இணக்கமாக இருந்தால் வெகுமதி!

# பா.ஜ. ஆட்சியில் சுதந்திரமான பத்திரிகை தண்டிக்கப்படுகிறது!

### மல்லிகார்ஜூன கார்கே குற்றச்சாட்டு!

புதுடெல்லி, மே.5-

உலக பத்திரிகை சுதந்திர தினத்தை முன்னிட்டு காங்கிரஸ் தலைவர் கார்கே எக்ஸ் தளத்தில் நேற்று பதிவிட்டுள்ளதாவது: 2014ம் ஆண்டு முதல் உலக பத்திரிகை சுதந்திரக் குறியீட்டில் இந்தியாவின் நிலை சீராக சரிந்து வருகிறது. செய்தி அறைகளை அமைதியாக்குவதற்காக சங் பரிவார் சட்ட கட்டமைப்புகளை அதிகளவில் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. 2014ம் ஆண்டு முதல் பாஜ ஆட்சியின் கீழ், உலக பத்திரிகை



சுதந்திர குறியீட்டில் இந்தியாவின் நிலை சரிந்து, 157 வது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

சங் பரிவார், செய்தி அறைகளை அமைதியாக்குவதற்காக சட்டக் கட்டமைப்புகளை அதிகளவில் ஆயுதமாகப் பயன்படுத்தி வருகிறது. அவதூறு சட்டங்கள், தேசியப் பாதுகாப்பு விதிகள் மற்றும் விரிவான குற்றவியல் சட்டங்கள் ஆகியவை நீதியின் கருவிகளாகப் பயன்படுத்தப்படாமல், அச்சுறுத்தலின் கருவிகளாகவே பயன்படுத்தப்படுகின்றன. 2014 முதல் 2023 வரையிலான காலகட்டத்தில் 36 பத்திரிகையாளர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர்.

உபா போன்ற கடுமையான சட்டங்களின் கீழ் பல பத்திரிகையாளர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. பாஜ ஆளும் மாநிலங்களில் பத்திரிகையாளர்கள் தங்கள் பணியைச் செய்ததற்காக கொல்லப்படுகிறார்கள். பா.ஜ. ஆர்.எஸ்.எஸ்.சின் செய்தி தெளிவாக உள்ளது; சுதந்திரமான பத்திரிகை தண்டிக்கப்படும், கீழ்ப்படிபவர்களுக்கு வெகுமதி அளிக்கப்படும். ஊடகத்தின் சில பிரிவுகள் ஆளும் தரப்பின் கருத்துக்களை எதிரொலிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளார்.

## தெற்கு ரயில்வே: மின் இணைப்புப் பராமரிப்பில் சாதனை!

சென்னை, மே 3-

ரயில்வே தனது மின் இணைப்பு பராமரிப்புப் பணிகளில் குறிப்பிடத்தக்க சாதனை படைத்துள்ளது. கடந்த 2025-2026 நிதியாண்டில் மின் இணைப்பு சாதனங்களில் ஏற்பட்ட கோளாறுகளின் எண்ணிக்கை வெறும் 3 ஆக குறைந்துள்ளது. தெற்கு ரயில்வே மின் இணைப்பு பராமரிப்பில் சாதனை படைத்துள்ளது.

இதற்கு முந்தைய ஆண்டான 2024-2025இல் இதே சாதனங்களில் 13 கோளாறுகள் பதிவாகியிருந்தன. அதாவது ஒரே ஆண்டில் 77 சதவீதம் கோளாறுகள் குறைந்துள்ளன. இந்த சாதனையின் மூலம் தெற்கு ரயில்வே, நாட்டிலேயே சிறந்த மண்டலங்களில் ஒன்றாக தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது.

இன்று ரயில்கள் டீசல் இல்லாமல் மின்சாரத்தில் இயங்குகின்றன. தண்டவாளத்திற்கு மேலே கம்பிகள் வழியாக மின்சாரம் பாய்ந்து ரயிலை இயக்குகிறது. இந்த மின் கம்பிகளும் அதனுடன் தொடர்புடைய சாதனங்களும் சேர்ந்தே TRD (Traction Distribution) சாதனங்கள் என அழைக்கப்படுகின்றன.

ரயில் பாதைகள் இப்போது முழுமையாக மின்சார மயமாக்கப் பட்டுள்ளதால், இந்த சாதனங்கள் ஒவ்வொரு பாதையிலும் பரவியுள்ளன. இவற்றில் ஏதாவது கோளாறு ஏற்பட்டால் அந்தப் பகுதியில் ரயில் இயக்கமே முழுமையாக நிற்கும். அது மட்டுமல்ல, சிக்னல் விளக்குகளும் பாதிக்கப்படும். அதனால் ரயில்கள் தாமதமாகும், பயணிகள் சிரமப்படுவார்கள்.

தெற்கு ரயில்வே பொது மேலாளர் சிங் மற்றும் தலைமை மின் பொறியாளர் கணேஷ் ஆகியோரின் தொடர் கண்காணிப்பும், வழி காட்டுதலும் இந்த சாதனையில் முக்கியப் பங்கு வகித்தன. ஒவ்வொரு மண்டல ரயில்வே மேலாளரும் தங்கள் பகுதியில் உள்ள சாதனங்களை சரியான நேரத்தில் பராமரிக்கின்றார்களா என்பதை தொடர்ந்து கண்காணித்தனர். ரயில்வே ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்பு நிறுவனமான RDSO வழங்கிய சிறப்புப் பராமரிப்பு வழிமுறைகளை கண்டிப்பாக பின்பற்றினர். இதன் விளைவாக 2025-2026 நிதியாண்டு முடியும் வரை எந்த ஒரு சாதனமும் பராமரிப்பு தவறாமல் பார்த்துக் கொள்ளப்பட்டது.

இந்த சாதனையால் பயணிகளுக்கு நேரடியான பலன்கள் கிடைத்துள்ளன. ரயில்கள் நேரத்தோடு புறப்படுகின்றன, நேரத்தோடு வந்து சேருகின்றன. மின் கோளாறு காரணமாக ரயில் நடுவழியில் நிற்கும் சிக்கல் குறைந்துள்ளது. பயணிகள் தொடர்ந்து அலைக்கழிக்கப்படும் நிலை தவிர்க்கப்பட்டுள்ளது.

அதிகப் பயணிகள் நெருக்கம் உள்ள பிரிவுகளிலும் பாதுகாப்பான பயணம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த சாதனையை தெற்கு ரயில்வே தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வதன் மூலம் பயணிகளுக்கு இன்னும் சிறந்த சேவையை வழங்க முடியும் என்று ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## உச்சநீதிமன்ற

# பதிவாளர் அலுவலகத்திற்கு தலைமை நீதிபதி கண்டனம்!

### அமலாக்கத்துறைக்கு நோட்டீஸ் அனுப்பும் உத்தரவை அமல்படுத்தாததால்!

புதுடெல்லி, மே,5-

அமலாக்கத் துறைக்கு நோட்டீஸ் அனுப்பும் உத்தரவை செயல்படுத்தாத உச்சநீதிமன்ற பதிவாளர் அலுவலகத்திற்கு தலைமை நீதிபதி கண்டனம் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலத்தில் 37 ஆயிரம் கோடி ரூபாய் வழக்கு ஒன்றில் அமலாக்கத்துறையை வழக்கில் இணைத்து கடந்த மார்ச் மாதம் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. அமலாக்கத்துறை பதிலளிக்க அன்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில், இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்த போது, அமலாக்கத்துறைக்கு இதுவரை நோட்டீஸ் அனுப்பவில்லை என்பதை மனுதாரர் வழக்கறிஞர் சுட்டிக் காட்டினார். அப்போது, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு உச்சநீதிமன்ற பதிவாளர் அலுவலகத்தை கடுமையாக கண்டித்தது. கடந்த முறை நோட்டீஸ் அனுப்ப தெளிவான உத்தரவு பிறப்பித்ததை நீதிபதிகள் சுட்டிக்காட்டினர். பதிவாளர் அலுவலகத்தின் செயல்பாடு மிகவும் மோசமானது என்றும் ஒவ்வொருவரும் தங்களை உச்ச நீதிமன்ற சூப்பர் தலைமை நீதிபதிகளாக நினைத்துக் கொண்டு செயல்படுகிறார்கள் என்று தலைமை நீதிபதி கடும் கண்டனம் தெரிவித்தார்.

பின்னர் இந்த விவகாரத்தில் உண்மை கண்டறியும் குழுவை அமைத்து விசாரணை நடத்த வேண்டும் என்று தலைமை பதிவாளருக்கு தலைமை நீதிபதி அமர்வு உத்தரவிட்டது. பதிவாளர் அலுவலகத்தை இதற்கு முன்னரும் தலைமை நீதிபதி உள்பட சில நீதிபதிகள் கண்டித்துள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

## திருப்பத்தூர் தொகுதியில்

# அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தொடர்ந்து முன்னிலை!

சிவகங்கை. மே 5.

கடந்த மாதம் 23ஆம் தேதி தமிழக சட்டமன்றத்திற்கான வாக்கு பதிவு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து நேற்று மே 4ம்தேதி வாக்குகள் எண்ணிக்கை துவங்கியது. இதில் சிவகங்கை மாவட்டத்தில் சிவகங்கை, திருப்பத்தூர், காரைக்குடி, மானாமதுரை தனி ஆகிய 4 சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு எந்திரங்கள் காரைக்குடி



அழகப்பா பொறியியல் கல்லூரியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தது. நேற்று காலை 8 மணிக்கு முதலாவதாக தபால் வாக்குகள் எண்ணப்பட்டது. அதனை தொடர்ந்து 8.30 மணிக்கு நான்கு சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்குகள் எண்ணப்பட்டது.

இதில் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் 5வது முறையாக போட்டியிட்ட வேட்பாளர் அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் பகல் 2 மணி நிலவரப்படி ஒன்பதாவது சுற்று வரை 460,3 வாக்குகள் பெற்று தொடர்ந்து முன்னிலையில் உள்ளார்.

வாக்குகள் விவரம்: கே.ஆர்.பெரியகருப்பன் திமுக 31 22 4 த.வெ.க. சீனிவாசன் 26 6 2 1 திரு மாறன் ஜி பா.ஜ.க. 11 382 பகல் 2 மணி வரை ஐந்தாவது முறையாக போட்டியிடும் அமைச்சர் வேட்பாளர் கேஆர்.பெரியகருப்பன் 460,3 வாக்குகள் பெற்று தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறார்.

## திருவாரூரில் இன்று

# 5 லட்சம் வியாபாரிகள் பங்கேற்கும் வணிகர் விழிப்புணர்வு எழுச்சி மாநாடு!

### பேரமைப்பு தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா அழைப்பு!

சென்னை, மே. 5-

வணிகர் தமிழ்நாடு சங்கங்களின் பேரமைப்பு தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு இன்று (மே 5ந்தேதி) 43வது வணிகர் தினத்தை வணிகர் விழிப்புணர்வு எழுச்சி மாநாடாக திருவாரூரில் இன்று (5ந்தேதி) நடக்கிறது; பேர மைப்பு மாநிலத் தலைவர் ஏ.எம். விக்கிரமராஜா தலைமையில் வணிகக் கொடியேற்று நிகழ்வுடன் மிகச்சிறப்பாக நடைபெற

மாநிலப் பொதுச் செயலாளர் கோவிந்த ராஜுலு மாநாட்டு வரவேற்புரை நிகழ்த்த உள்ளார். பிரகடனத் தீர்மானங்களை மாநிலப் பொருளாளர் ஹாஜி ஏ.எம்.சதக்கத்துல்லா, மாநாட்டு தீர்மானங்களை மாநில தலைமைச் செயலாளர் பேராசிரியர் ராஜ்குமார் முன்மொழிய உள்ளனர்.

வணிக அமைப்புகளின் நீண்ட, நெடிய வரலாற்றில் 42 ஆண்டுகளை கடந்து 43 வது ஆண்டில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு வெற்றிகரமாக தனது கால்தடத்தை பதிக்கிறது. தமிழக வணிகர்களுக்குள் ஒற்றுமையை உருவாக்கி ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண் மேற்கொண்டு இதுநாள் வரை வணிகர்களின் நலன் காக்க பேரமைப்பு பல்வேறு நடவடிக்கைகளையும், யுக்திகளையும் கையாண்டு வந்திருக்கின்றது.

வணிகர்களுக்கான தீர்வுகளை பெறுவதிலும், அரசியல் பாரபட்சமின்றி பேரமைப்பு தனது நடவடிக்கைகளை இதுவரை சிறப்பாகவே செய்து வந்திருக்கின்றது.

தமிழகத்தில் தேர்தல் திருவிழா நிறைவுபெற்ற நிலையில் வணிகர்கள் தங்களின் 100 சதம் வாக்குப்பதிவை உறுதி செய்து, அடுத்து ஆட்சிக்கு வருகின்ற ஆட்சியாளர்களை அடையாளப் படுத்திடவும், ஒட்டுமொத்த தமிழக வணிகர்களின் வாழ்த்துக்களை சமர்ப்பிக்கும் மாநாடாகவும், திருவாரூரில் நடைபெற இருக்கும் 43 வது மாநாட்டினை மக்கள் திருவிழாவாக பேரமைப்பு நடத்திட இருக்கின்றது. வணிகர் விழிப்புணர்வு எழுச்சி மாநாட்டில் நிறைவேற்றப்பட இருக்கின்ற தீர்மானங்களுக்கும், தீர்வுகாணும் விதமாக பேரமைப்பு தனது வாக்கு வங்கியின் பங்கினால் நிச்சயம் தேர்தல் முடிவுகள் இருக்கும் என பேரமைப்பு நம்புகிறது.

அரசு அமல்படுத்தும் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் மக்கள் தொடர்பு பணியாளர்களாகவும், சேவையாற்றி வருகின்ற வணிகர்களை அரசு ஊழியர்களாக அங்கீகரிக்கும் நிலை உருவாக்கப்பட வேண்டும், அதற்கான விழிப்புணர்வும் எழுச்சியும் வணிகர்களிடம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ப தற்கான ஆயத்தப்பணியே இம்மாநாட்டின் முக்கிய குறிக்கோள்.

இவ்வாறு ஏ.எம். விக்கிரமராஜா கூறி உள்ளார்.

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

# அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி உதவித்தொகைத் திட்டம்!

### 2026–2027 கல்வியாண்டிற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன!

சென்னை,மே.5-

தமிழ்நாடு அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் ஆதிதிராவிடர், மதம்மாறிய கிறிஸ்துவ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் வெளிநாடுகளில் உயர்கல்வி பயில "அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி உதவித்தொகைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2026-2027 கல்வியாண்டிற்கான விண்ணப்பங்கள் தற்போது வரவேற்கப்படுகின்றன.

**தகுதி நிபந்தனைகள்:**

1. QS World University Ranking பட்டியலில் முதல் 1000 இடங்களுக்குள் உள்ள வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் முதுகலைப் பட்டம் (Master's Degree) அல்லது முனைவர் ஆராய்ச்சிப் படிப்பில் (Ph.D. / Post Doctoral Research) சேர்க்கை பெற்றிருக்க வேண்டும்.

2. Master's Degree: 01.04.2026 அன்று 35 வயதை நிறைவு செய்திருக்கக் கூடாது.

3. Ph.D. / Post Doctoral Research: 01.04.2026 அன்று 40 வயதை நிறைவு செய்திருக்கக் கூடாது.

4. குடும்ப ஆண்டு வருமானம்: ரூ.12.00 இலட்சத்தை மிகாமல் இருக்க வேண்டும்.

5. விண்ணப்பங்கள், மாணாக்கர்கள் சேர்க்கை பெறும் பல்கலைக்கழகங்களின் QS World University Ranking தரவரிசையின் அடிப்படையிலேயே பரிசீலனை செய்யப்படும்.

மேலும், இத்திட்டம் தொடர்பான அரசாணைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் விரிவான விவரங்களை www.tnadw.tn.gov.in என்ற இணையதள முகவரியில் காணலாம். விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் முன் மேற்படி விவரங்களை முழுமையாக படித்து பின்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2026-2027 கல்வியாண்டிற்கான விண்ணப்பங்கள் இணைய வழியில் மட்டுமே பெறப்படும். தகுதியுடைய மாணவர்கள் 05.05.2026 முதல் 05.06.2026 வரை தேவையான ஆவணங்களுடன் https://www.tnadw.tn.gov.in/overseas_scholarship அல்லது https://tnadwscholarship.in/ என்ற இணையதள முகவரியின் மூலம் இணைய வழியில் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நேரடியாகவோ, தபால் மூலமாகவோ, கால அவகாசம் முடிந்த பின்னரோ சமர்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

விண்ணப்பிக்கும் போது தேவைப்படும் ஆவணங்களின் விவரங்கள்:

1. வெளிநாட்டு பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட சேர்க்கை கடிதம் University Offer/Admission Letter (Conditional / Unconditional)

2. சாதிச் சான்றிதழ் (இணைய வழியில் பெறப்பட்டது)

3. சமீபத்திய குடும்ப வருமானச் சான்றிதழ் (இணைய வழியில் பெறப்பட்டது)

4. 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு, இளநிலை பட்டப்படிப்பு (UG) மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு (PG) மதிப்பெண் சான்றிதழ் (If applicable).

5. இளநிலை / முதுநிலை பட்டப்படிப்புச் சான்றிதழ் (Degree Certificate / Provisional Certificate / Course Completion Certificate)

6. ஆதார் அடையாள அட்டை (Aadhar Card)

7. குடும்ப அட்டை (Ration Card)

8. கடவுச்சீட்டு (Passport)

9. பெற்றோரின்/ விண்ணப்பதாரரின் சமீபத்திய 3 மாத சம்பளச் சீட்டு நகல். (Latest three month payslip- If applicable)

10. பெற்றோரின்/ விண்ணப்பதாரரின் வருமான வரி தாக்கல் (ITR) ஆவணங்கள் - If applicable.

11. மாற்றுத்திறனாளிகள் அடையாள அட்டை (UDID Card) -If applicable.

12. சமீபத்திய பாஸ்போர்ட் அளவு புகைப்படம்.

விண்ணப்பதாரர்கள் தேவையான அனைத்து ஆவணங்களையும் பதிவேற்றம் செய்து, விண்ணப்பத்தை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

விண்ணப்பித்தல் தொடர்பான சந்தேகங்களுக்கு : 1800-599-7638 என்ற கட்டணமில்லா தொலைபேசி முகவரியை அணுகவும்.

# லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஒருவர் உயிரிழப்பு!

### 4 மீட்புப் பணியாளர்கள் காயம்!

பெய்ரூட், மே.5-

ஹிஸ்புல்லாவுடனான போரில் ஒரு நிலையற்ற போர்நிறுத்தம் இருந்த போதிலும், இஸ்ரேல் அந்நாட்டின் மீதான தனது தாக்குதல்களைத் தொடர்ந்த நிலையில், தெற்கு லெபனான் மீது ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட தாக்குதல்களில் குறைந்தது ஒருவர் கொல்லப்பட்டதாகவும், நான்கு மீட்புப் பணியாளர்கள் காயமடைந்ததாகவும் லெபனான் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. தனித்தனி அறிக்கைகளில், அரப்சலிம் மீதான தாக்குதலில் குறைந்தது ஒருவர் கொல்லப்பட்டதாகவும், ஒரு குழந்தை உட்பட மூவர் காயமடைந்ததாகவும், ஸ்ரீஃபா மீதான மற்றொரு தாக்குதலில் ஹிஸ்புல்லாவுடன் தொடர்புடைய இஸ்லாமிய சுகாதாரக் குழுவைச் சேர்ந்த நான்கு மீட்புப் பணியாளர்கள் உட்பட ஐந்து பேர் காயமடைந்ததாகவும் அமைச்சகம் கூறியுள்ளது.

"இத்தொடர் தாக்குதல்களைத் தான் வன்மையாகக் கண்டிப்பதாக அமைச்சகம் மீண்டும் தெரிவித்துள்ளது. மேலும், மோதல் மண்டலங்களில் நடைபெறும் தாக்குதல்களால் ஏற்படும் எத்தகைய ஆபத்திலிருந்தும் மருத்துவ வசதிகள் பாதுகாப்பாக இருப்பதை உறுதிசெய்ய வேண்டியதன் அவசியம் குறித்து ஜெனிவா உடன்படிக்கையின் 19வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதை இது நினைவுகூர்கிறது. ஆனால், தற்போது அங்கு நிகழ்ந்துகொண்டிருப்பது இதற்குச் முற்றிலும் நேர்மாறாக இருப்பதாக தெரிவித்தது.

தெற்கு லெபனானில், தான் ஆக்கிரமித்துள்ள பகுதிக்கு அப்பால் அமைந்துள்ள கிராமங்களுக்காக, இஸ்ரேலிய இராணுவம் ஞாயிற்றுக்கிழமையன்று புதிய வெளியேற்ற எச்சரிக்கைகளை வெளியிட்டது. இந்த எச்சரிக்கையானது 10க்கும் மேற்பட்ட கிராமங்களையும் நகரங்களையும் உள்ளடக்கியுள்ளது; இதில், லித்தானி நதிக்கு வடக்கே அமைந்துள்ள இந்நதியின் தெற்கே இஸ்ரேல் தனது படைகளை நிறுத்தியுள்ளது.

அரப்சலீம் மற்றும் ஸ்ரிஃபா ஆகிய இடங்களும் இந்த எச்சரிக்கையில் சேர்க்கப்பட்டிருந்தன. தெற்கு லெபனான் முழுவதும், வெளியேற்ற எச்சரிக்கையில் குறிப்பிடப்படாத நகரங்கள் உட்படப் பல இடங்களின் மீதும் இஸ்ரேல் தொடர் தாக்குதல்களை நடத்தியதாக, லெபனானின் அரசுக்குச் சொந்தமான தேசிய செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. ஏப்ரல் 17 முதல், இஸ்ரேலுக்கும் லெபனானுக்கும் இடையே ஒரு நிலையற்ற போர்நிறுத்தம் நடைமுறையில் உள்ளது; இது ஹிஸ்புல்லா போராளி அமைப்பிற்கும் இஸ்ரேலிய இராணுவத்திற்கும் இடையிலான வன்முறையை நிறுத்துவதை நோக்கமாகக் கொண்டது.

புதன்கிழமையன்று, இஸ்ரேலின் கட்டுப்பாட்டுப் பகுதியைக் குறிக்கும் "மஞ்சள் கோட்டிற்கு அப்பால்" உள்ள ஹிஸ்புல்லா நிலைகள் மீது தாக்குதல் நடத்தப்போவதாக இஸ்ரேலியப் படைத் தளபதி ஐயல் ஜமீர் எச்சரித்தார். "மஞ்சள் கோட்டிற்கு அப்பாலும், லிட்டானி நதிக்கு வடக்கிலும் எங்கு, எத்தகைய அச்சுறுத்தல் எங்கள் சமூகங்களுக்கோ அல்லது எங்கள் படைகளுக்கோ எதிராக எழுந்தாலும், அது முறியடிக்கப்படும்," என்று இஸ்ரேலியப் படைகளை ஆய்வு செய்தபோது அவர் கூறினார். "திட்டமிடப்பட்ட, உடனடியான அல்லது நடைபெற்றுக்கொண்டிருக்கும் தாக்குதல்களுக்கு" எதிராக நடவடிக்கை எடுக்கும் உரிமையை, போர்நிறுத்த ஒப்பந்தத்தின் வாசகங்கள் இஸ்ரேலுக்கு வழங்குகின்றன.

## நேபாளத்தில் முந்தைய இடைக்கால அரசால் செய்யப்பட்ட

# 1500க்கும் மேற்பட்ட நியமனங்கள் ஒரே நாளில் ரத்து!

### அந்நாட்டு அரசு அதிரடி!

காத்மாண்டு, மே.5-

நேபாளத்தில் அரசியல் உள்நோக்கங்களுடன் முந்தைய இடைக்கால அரசால் செய்யப்பட்ட 1500க்கும் மேற்பட்ட நியமனங்களை ஒரே நாளில் ரத்து செய்வதற்கான அரசாணையை அந்நாட்டு அரசு வெளியிட்டுள்ளது. அமைச்சரவை பரிந்துரையின் பேரில், இந்த ஆணையை அதிபர் ராம்சந்திர பௌடேல் சனிக்கிழமை வெளியிட்டார். இதன் காரணமாக நிர்வாகம், சுகாதாரம், கல்வி உள்ளிட்ட பல துறைகள் பாதிக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளது என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்து வருகின்றன. கடந்த ஆண்டு செப்டம்பரில் நடைபெற்ற இளைஞர்கள் போராட்டத்தைத் தொடர்ந்து நேபாளத்தின் அப்போதைய பிரதமர் கே.பி.சர்மா ஒலி அரசு கலைக்கப்பட்டது.

இடைக்கால பிரதமராக சுசீலா கார்க்கி நியமிக்கப்பட்டார்.

இதைத் தொடர்ந்து, கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பாலேந்திர ஷா தலைமையிலான ராஷ்டரிய சுதந்திர கட்சி ஆட்சிக்கு வந்தது.

இந்நிலையில், முந்தைய இடைக்கால அரசால் நியமிக்கப்பட்ட 1,594 பேரின் பதவிகள் நீக்கம் செய்யப்படுவதாகவும், அவர்களின் பதவி காலம் அல்லது நியமன விதிமுறைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளாமல், மார்ச் 26 ஆம் தேதிக்கு முன் செய்யப்பட்ட அனைத்து நியமனங்களும் ரத்து செய்யப்படுவதாகவும் ஆணையில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கை அரசு நிறுவனங்கள், ஒழுங்குமுறை அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் ஊடக அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளைப் பாதித்துள்ளது. அரசியல் உள்நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட இந்த நியமனங்களை திருத்துவதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும் என அரசுத் தரப்பில் இதற்கு விளக்கம் அளிக்கப்பட்டது.